Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 37 | உள்ளூர் - 06.02.2026 | வெள்ளி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 54 | * Issue 37 | வெளியூர் - 07.02.2026 | சனி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

குலதெய்வத்தை வழிபட ரகசிய முறைகள் .!

அரசு கலை கல்லூரிகளில் 426 காலியிடங்கள்!

தொடரும் எதிர்க்கட்சிகள் அமளி!

அதிகரிக்கும் பதற்றம்... ஈரானில்

# மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கும் தேர்தல் பிரசார கூட்டம் 1-ந் தேதி மாற்றம்!

மதுரை, பிப். 06–

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இதையொட்டி தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பா.ஜ.க., அ.ம.மு.க., த.மா.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன. கடந்த மாதம் 23–ந்தேதி இந்த கூட்டணியின் முதல் தேர்தல் பிரசார கூட்டம் மதுராந்தகத்தில் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதனை தொடர்ந்து 2–வது கட்டமாக தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரசார கூட்டம் மதுரையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை விமான நிலையம் அருகே மண்டேலா நகர் பகுதியில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இதில் பிரதமர் மோடி மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள். இந்த கூட்டம் நடைபெற உள்ள இடத்தை மாநில பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறுகையில், தி.மு.க. அரசை வீட்டிற்கு அனுப்பும் வகையில் பிரதமர் மோடி பங்கேற்கும் கூட்டம் நடைபெற உள்ளது.



தி.மு.க. எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்கவில்லை என்று கூறிவந்த நிலையில் தற்போது எய்ம்ஸ் கட்டிடம் எழுந்து நிற்கிறது. இதற்கு அடிக்கல் நாட்டிய இடத்திலேயே பிரதமர் தேர்தல் பிரசார கூட்டம் நடைபெறுகிறது என்றால் இந்த கூட்டம் பிப்ரவரி 28–ந் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது 1–ந்தேதி மாற்றப்பட்டுள்ளதாக கூறினார்.

அன்றைய தினம் மதுரை வரும் பிரதமர் மோடி திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்து விட்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்பார் என்று பா.ஜ.க. நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# தொடரும் அமளி! மக்களவை பிப். 9 வரை ஒத்திவைப்பு!

புதுடெல்லி, பிப். 06–

குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் முன்னாள் ராணுவத் தளபதி நரவணேவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சீன எல்லைப் பிரச்னை குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை பேச அனுமதிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த 8 எம்பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



இதனிடையே, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு மக்களவையில் பிரதமர் மோடி செவ்வாய்க்கிழமை மாலை பதிலுரை அளிக்கவிருந்தார். ஆனால், அமளி காரணமாக பிரதமரின் பேச்சு ரத்து செய்யப்பட்டு, அவை ஒத்திவைக்கப்பட்டது. நேற்றும் மக்களவையை எதிர்க்கட்சியினர் முடக்கிய நிலையில், ராகுல் காந்தியை பேச அனுமதிக்கும் வரை அமளி தொடரும் என்று காங்கிரஸ் எம்பிக்கள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில், இன்று காலை மக்களவை கூடியவுடன் பதாகைகளுடன் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியை தொடர்ந்த நிலையில், முதலில் பகல் 12 வரை ஒத்திவைக்க ப்பட்டு, பின்னர் பிப். 9 காலை வரை ஒத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டது. எதிர்க்கட்சியினரின் அமளியை கண்டித்து பேசிய அவைத் தலைவர் ஓம் பிர்லா, "பட்ஜெட் தொடரின் 19 மணிநேரம் 13 நிமிடங்கள் அமளியால் வீணாகியுள்ளது. மக்கள் தங்களின் பிரச்னையைப் பேசுவதற்காகவே உறுப்பினர்களை தேர்ந்தெடுத்துள்ளனர், முழக்கங்களை எழுப்புவதற்கு அல்ல. அவையை சுமுகமாக நடைபெற வேண்டும்" எனத் தெரிவித்தார்.

# அதிகரிக்கும் பதற்றம்; ஈரானில் இருக்கும் அமெரிக்கர்கள் வெளியேற உத்தரவு!

ஈரான், பிப். 06–

ஈரானில் இருக்கும் தங்கள் நாட்டவர்கள் உடனடியாக வெளியேற அமெரிக்க அரசு அறிவுறுத்தி உள்ளது. மேற்காசிய நாடான ஈரானில் நிலவி வரும் பொரு ளாதார பின்னடைவுகள் மற்றும் விலைவாசி உயர்வை க் கண்டித்து , கடந்த டிசம்பர் மாதம் முதல் , அந்நாட்டு மக்கள் அரசுக்கு எதிராக போராடி வருகின்றனர் . போராட்டத்தை ஒடுக்க ஈரான் அரசு மேற்கொண்ட நடவடிக்கையில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் . இருபத்து ஏழாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்




ஈரான் உடனான பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில் , அமெரிக்க கடற்படையின் விமானந்தாங்கி கப்பல்கள் , போர்க் கப்பல்கள் மேற்காசிய கடற்பகுதிக்குள் நுழைந்துள்ளன . ஈரான் அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தத்தை செய்யும் என டிரம்ப் கூறி வருகிறார் . பதட்டங்களைத் தணிக்கும் நோக்கில் , அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே உயர்மட்டப் பேச்சு வார்த்தைகளை நடத்த திட்டமிட்டுள்ளது. நாளுக்கு நாள் பதற்றம் அதிகரித்து வருவதால் விமான நிறுவனங்களும் விமானங்களை ரத்து செய்து வருகின்றன .

ஈரான் அதிகாரிகள் இணையத்தை முடக்கி இருக்கின்றனர் . பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிப்பு , சாலை மூடல்கள் , பொதுப் போக்குவரத்து இடையூறுகள் மற்றும் இணையத் தடைகள் ஆகியவை தொடர்ந்து நீடிக்கின்றன . ஈரானில் இருக்கும் தங்கள் நாட்டு குடியுரிமை பெற்றவர்கள் உடனடியாக வெளியேற அமெரிக்க அரசு அறிவுறுத்தி உள்ளது . இது குறித்து அமெரிக்க அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது : அமெரிக்கர்கள் இப்பொழுதே ஈரானை விட்டு வெளியேறுங்கள் . உங்களால் வெளியேற முடியாவிட்டால் , உங்கள் வசிப்பிடத்தில் அல்லது வேறு பாதுகாப்பான கட்டடத்தில் ஒரு பாதுகாப்பான இடத்தில் பத்திரமாக தங்கி இருங்கள் . உணவு , தண்ணீர் , மருந்துகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை கையிருப்பில் வைத்திருங்கள் . ஆர்ப்பாட்டங்களைத் தவிர்க்க வேண்டும் . தற்போதைய செய்திகளுக்கு உள்ளூர் ஊடகங்களைக் கண்காணிக்க வேண்டும் . உங்கள் தொலைபேசியை சார்ஜ் செய்து வைத்திருக்க வேண்டும் . இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது

ஈரான் நாட்டுக்கும் அமெரிக்காவுக்கும் நீண்ட காலமாக தூதரக உறவு இல்லை . இதனால் அங்கு சொற்ப எண்ணிக்கையிலேயே அமெரிக்கர்கள் இருக்க வாய்ப்பு உள்ளது . இவர்கள் , வேறு நாடுகளைச் சேர்ந்த இரட்டை குடியுரிமை பெற்ற அமெரிக்கர்களாக இருக்கக்கூடும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன . அவர்களை உடனடியாக வெளியேறும்படி அமெரிக்கா அறிவுறுத்தி உள்ளது .

## மாற்றமில்லை..

# குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி 5.25% தொடரும்..

## இழயை இறக்கிய ரிசர்வ் வங்கி!


டெல்லி, பிப். 06–

ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை. தற்போது இருப்பதை போல் 5.25 சதவீதமாக தொடர்ந்து நீடிக்கும் என்று ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார். ரெப்போ வட்டி விகிதம் குறைந்தால் வங்கியின் வாங்கிய கடனுக்கான வட்டி குறையும். இதனால் ரெப்போ வட்டி விகிதம் குறையும் என்று பலரும் எதிர்பார்த்த நிலையில் அதில் மாற்றம் செய்யப்படவில்லை




வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடன்களுக்கான விதிக்கப்படும் வட்டி விகிதத்தை ரெப்போ வட்டி விகிதம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இந்த ரெப்போ வட்டி விகிதம் 2 மாதத்துக்கு ஒருமுறை மாற்றி அமைக்கப்படும். இதனை ரிசர்வ் வங்கி மேற்கொண்டு வருகிறது

இந்நிலையில் தான் ரெப்போ வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சஞ்சய் ம ல் ஹோ த் ரா தெரிவித்துள்ளார். தற்போது இருப்பதை போல் 5.25 சதவீதம் என்ற அடிப்படையில் ரெப்போ வட்டி விகிதம் தொடரும் என்று அவர் கூறியுள்ளார். ரெப்போ வட்டி விகிதம் தான் வங்கிகளில் மக்கள் வாங்கும் கடனுக்கான வட்டியை நிர்ணயம் செய்கிறது. ரெப்போ வட்டி விகிதம் குறைந்தால் வங்கியில் நாம் வாங்கிய வீடு, கார், கல்வி உள்ளிட்ட கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி குறையும். ரெப்போ வட்டி விகிதம் அதிகரித்தால் வங்கியில் வாங்கிய கடனுக்கான வட்டியும் அதிகரிக்கும். இதனால் ரெப்போ வட்டி விகிதம் தொடர்பான இன்றைய அறிவிப்பை பலரும் எதிர்பார்த்தனர். ஏனென்றால் கடந்த ஆண்டு முதல் அடிக்கடி ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்பட்டு வந்தது. கடந்த டிசம்பர் மாதம் கூட குறைக்கப்பட்டது. அதுமட்டுமின்றி கடந்த 1ம் தேதி தான் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அந்த பட்ஜெட்டுக்கு பிறகு ரெப்போ வட்டி விகிதம் மாற்றம் தொடர்பான அறிவிப்பு முதல் முறையாக வெளியாகிறது என்பதால் அனைவரும் அதிகம் எதிர்பார்த்தனர். ஆனால் எதிர்பார்ப்பு பொய்த்துப்போனது. இருப்பினும் ரெப்போ வட்டி விகிதம் அதிகரிக்கப்படவில்லை என்பது ஆறுதலான விஷயமாக உள்ளது.








தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் 2091 கோடி ரூபாய் முதலீட்டில், 2104 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் அமைத்துள்ள, அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஆகியோர் கலந்து கொண்டனர். காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் குழுமத் தலைவர் மசாஃபுமி அண்டோ, மிட்சுபிஷி எலக்ட்ரிக் சிங்கப்பூர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தோஷிமிட்சு இட்டோ. மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்திய நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அட்சுஷி டகாசே, பொது மேலாளர் டோரு இவாகாமி, இயக்குநர் டோரு ஒனோடா, தலைமை நிதி அதிகாரி குர்விந்தர் சிங், சென்னையில் உள்ள ஜப்பான் நாட்டுத் தூதர்கள் முனியோ டகாஹாஷி மற்றும் நாகோ யுசாவா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 42 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் சுட்டப்பட்டுள்ள 6 சமத்துவபுரங்கள், நாமக்கல் மாவட்டம், புதுப்பட்டி முதல் கெடமலை வரை 34 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலை, 212 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்கள், பாலங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக்கூடங்கள், பொது விநியோகக் கடைகள், என மொத்தம் 289 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் வலித் ஆதித்ய நீலம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலையங்கம்

மதுரை மணி
வெள்ளிக்கிழமை 06.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 23-ம் தேதி

## டிரம்ப்–க்கு பல்பு கொடுத்த ரஷ்யா..



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பிரதமர் நரேந்திர மோடி உடன் வர்த்தக ஒப்பந்தத்திற்காக தொலைபேசியில் அழைத்து பேசிய போது இந்தியா ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை நிறுத்தி அமெரிக்கா மற்றும் வெனிசுலாவிலிருந்து வாங்க ஒப்புக்கொண்டதாக டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் பதிவில் கூறியது தற்போது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

இந்தியா–அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, இந்தியா தனது கச்சா எண்ணெய் கொள்முதலை மாற்றுவதாக டிரம்ப் தெரிவித்தார். ஆனால் ரஷ்யா இதை மறுத்துள்ளது. கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் புதன்கிழமை தெரிவிக்கையில் "இந்தியா எந்த நாட்டிலிருந்தும் கச்சா எண்ணெய் வாங்க சுதந்திரம் கொண்டு உள்ளது. ரஷ்யா இந்தியாவுக்கு ஒரே எண்ணெய் சப்ளையர் அல்ல. இந்தியா காலம் காலமாக பல நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் வாங்கி வருகிறது. இதில் புதிதாக எதுவும் இல்லை" என்று கூறினார். மேலும் பெஸ்கோவ், ரஷ்ய கச்சா எண்ணெய் கொள்முதலை நிறுத்துவது குறித்து இந்தியாவிடமிருந்து எந்த அறிவிப்பும் வரவில்லை என்றும் தெரிவித்திருந்தார். ரஷ்ய தனியார் வணிக ரேடியோ காமர்சன்ட் FM–இல் வெளியான செய்தியின்படி, பிரதமர் மோடி ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை நிறுத்துவது குறித்து எந்த அதிகாரப்பூர்வ ஒப்பந்தத்திலும் குறிப்பிடவில்லை. மேலும் தேசிய எரிசக்தி பாதுகாப்பு அமைப்பின் மூத்த நிபுணர் இகோர் யுஷ்கோவ் கூறுகையில், இந்திய சுத்திகரிப்பு நிலையங்கள் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை முழுமையாக நிறுத்த முடியாது. ரஷ்ய எண்ணெய் இந்தியாவின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் உள்ளது. விலை மற்றும் சப்ளை நிலைத்தன்மை ஆகியவை ரஷ்யாவை முக்கிய சப்ளையராக வைத்துள்ளன எனவும் விளக்கினார்.

இந்தியா தனது கச்சா எண்ணெய் நுகர்வை தொடர்ந்து பல்வகைப்படுத்தி வருகிறது. 2022க்கு முன்பு ரஷ்யாவிலிருந்து மிகக் குறைவாகவே கச்சா எண்ணெய் வாங்கியது. ஆனால் உக்ரைன் போருக்குப் பிறகு மேற்கத்திய நாடுகள் ரஷ்ய எண்ணெய் வாங்குவதை நிறுத்தின. அப்போது இந்தியா தள்ளுபடி விலையில் ரஷ்ய எண்ணெய் வாங்கியது. இது இந்தியாவில் எரிபொருள் விலையை குறைக்க உதவியது. இந்தியாவின் எரிசக்தி கொள்கை எப்போதும் நுகர்வோர் தேவை மற்றும் விலை நிலைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டது. அரசியல் அழுத்தங்களுக்கு அப்பால் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் விலை ஸ்திரத்தன்மை முக்கியம் என்ற அடிப்படையில் தான் கச்சா எண்ணெய்யை உலக நாடுகளில் இருந்து வாங்கி வருகிறது. இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட பிற நாடுகளிலிருந்து எண்ணெய் வாங்குவதை அதிகரித்து வருகிறது. ஆனால் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை திடீரென நிறுத்துவது குறித்து எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் இல்லை. கச்சா எண்ணெய் விலை நிலவரம்: சர்வதேத சந்தையில் கச்சா எண்ணெய் விலை இன்று சிறிய அளவிலான உயர்வுடன் காணப்படுகிறது. WTI க்ரூட் ஆயில் ஒரு பேரல் 63.61 டாலருக்கு வர்த்தகமாகிறது. இது நேற்றைய அளவை காட்டிலும் 0.63% அதிகமாகும். இதேபோல் பிரென்ட் க்ரூட் ஆயில் 67.87 டாலருக்கும் (+0.80%), முர்பான் க்ரூட் ஆயில் 68.64 டாலருக்கும் (+0.53%) உயர்ந்துள்ளது. இந்த சிறிய உயர்வும் உலக சந்தையில் ஏற்பட்டுள்ள தேவை அதிகரிப்பு மற்றும் சப்ளை நிலவரத்தால் ஏற்பட்டது.

## சென்னையில் போதை பொருட்கள்: நடிகை அஞ்சு கிருஷ்ணா உள்பட 9 பேர் கைது!




சென்னை, பிப். 06–

சென்னை வளசரவாக்கம் பகுதியில் போதைப்பொருள் அடமாட்டம் அதிகரித்துள்ள போதைப் பொருள் தடுப்புப் பிரிவு காவல்துறையினருக்கு தொடர்ந்து புகார்கள் வந்தன. இதையடுத்து, போதை பொருள் விற்பனையை காவல்துறையினர் ரகசியமாக கண்காணித்து வந்தனர். இதைத்தொடர்ந்த, அந்த பகுதியில் போலீசார் நடத்திய விசாரணையில், நெசப்பாக்கத்தை சேர்ந்த விக்னேஸ்வரன் (35) என்ற இளைஞரை கைது செய்தனர். மேலும் அவரிடம் இருந்து மெத்தபெட்டமைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவர்களுக்கு போதை பொருள் விற்பனை செய்து வருவது, சென்னை கோபாலபுரத்தை சேர்ந்த வெங்கடேஷ்குமார் என்பது தெரிய வந்தது. அவரை கைது செய்த போலீசார் அவரிடம் நடத்திய விசாரணையில், அவர் பலருக்கு போதை பொருள் சப்ளை செய்து வந்தது தெரிய வந்தது. இதையடுத்து, திரைப்பட நடிகை அஞ்சு கிருஷ்ணா (30) கைது செய்யப்பட்டார். இவருடன் தமிழ் திரைப்படங்களில் துணை நடிகையாக நடித்து வரும் வின்சி என்கிற நிவேதா (26), பெரியபணிசேரியை சேர்ந்த கார்த்திக் ராஜா (31), காட்டுப்பாக்கத்தை சேர்ந்த எஸ்வந்த் (25), மேற்கு மாம்பலத்தை சேர்ந்த ஸ்ரீராம் (33), கோவிலம்பாக்கத்தை சேர்ந்த அல்பின்சா (27), சென்னை மண்ணடியை சேர்ந்த தமிம் நிஸ்வான் (27) ஆகிய 7 பேரும் கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து போதைப்பொருள் பயன்படுத்தியதாக கைது செய்யப்பட்ட 9 பேரும் பூந்தமல்லி குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப் பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மெத்தபெட்டமைன், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள், 9 செல்போன்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய்யப்பட்டுள்ள நடிகை அஞ்சு கிருஷ்ணா 'ஓம் வெல்லமலை' திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

# Media Expo விரிவுபடுத்த Messe Frankfurt Trade Fairs India, Business Live Trade Fairs நிறுவனத்துடன் கைகோர்க்கிறது!

சிவகாசி, பிப். 06–

Messe Frankfurt Trade Fairs India மற்றும் Business Live Trade Fairs இணைந்துள்ள இந்த முக்கிய கூட்டாண்மையின் கீழ், Sign India Expo இப்போது Media Expo ஆக மாற்றப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக Media Expo Kochi மற்றும் Media Expo Hyderabad அறிமுகப்படுத்தப்படுகின்றன; மேலும் Sign India Expo Chennai, ஏற்கனவே நடைபெற்று வரும் Media Expo Chennai நிகழ்ச்சியுடன் இணைக்கப்படுகிறது. இதன் மூலம் முன்பு மூன்று நகரங்களில் நடை பெற்ற Media Expo, இனி சென்னை, ஹைதராபாத், கொச்சி, மும்பை மற்றும் நியூ டெல்லி ஆகிய ஐந்து முக்கிய நகரங்களுக்கு விரிவடைகிறது.

மும்பை, நியூ டெல்லி மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் 56 வெற்றிகரமான பதிப்புகளை நடத்திய Media Expo, தென் இந்திய சந்தைகளில் வலுவான தடத்தை பதித்துள்ள Sign India Ex–po–வின் மரபையும் இணைத்து, பிரிண்டிங், சைனேஜ், டிஜிட்டல்




சைனேஜ், OOHDOOH, ரீட்டெயில் டிஸ்ப்ளே, POPPOSM, LED திரைகள், பெரிய அளவிலான பிரிண்டிங், 3D மற்றும் லேசர் பிரிண்டிங் உள்ளிட்ட பல தயாரிப்பு பிரிவுகளுக்கான ஒருங்கிணைந்த தொழில் வர்த்தக கண்காட்சி தளமாக மாறுகிறது. இந்த மாற்றம், தென் இந்தியாவின் முக்கிய வணிக மையங்களில் வாங்குபவர் விற்பனையாளர் தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும்.

இந்த கூட்டாண்மையை பற்றி Messe Frankfurt Asia Holdings Ltd நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ராஜ் மணேக் மற்றும் Business Live Trade Fairs இயக்குநர் திரு. சிவ பிரசாத் பல்நாட்டி ஆகியோர், தென் இந்தியாவில் தொழில்துறைக்கு ஒருங்கிணைந்த, உலகளாவிய நிபுணத்துவம் கொண்ட கண்காட்சி மேடை உருவாகும் என வலியுறுத்தினர். IMARC Group மற்றும் Mordor Intelli–gence மதிப்பீடுகளின்படி, இந்தியாவின் பிரிண்டிங், சைனேஜ் மற்றும் OOH DOOH சந்தைகள் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், இந்த முயற்சி தொழில்துறையின் எதிர்கால தேவைகளுக்கு தகுந்த வலுவான சூழலமைப்பை உருவாக்குகிறது.

# கோவெஸ்ட்ரோ (இந்தியா) கடலூரில் நீர் பாதுகாப்பு மற்றும் கழிவு மேலாண்மைக்கு ரூ.43.24 லட்சம் நன்கொடை!

கடலூர். பிப். 06–

கோவெஸ்ட்ரோ (இந்தியா) நிறுவனம் கடலூர் மாவட்டத்தில் நீர் பாதுகாப்பு மற்றும் திடக் கழிவு மேலாண்மை ஆகிய இரு முக்கிய சமூக வளர்ச்சி முயற்சிகளுக்காக மொத்தம் ரூ.43.24 லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த நிதி, கடலூர் மாவட்ட நிர்வாகத்து டன் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில், ஆலம்பாடி, தொண்டன் குறிச்சி மற்றும் பாரூர் பஞ்சாயத்துகளில் உள்ள பாசனக் குளங்களுக்கு அடை மண் அகற்ற ரூ.23.24 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி சுமார்



800 ஹெக்டேர் விவசாய நிலங்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை வழங்குவதோடு, நீர் சேமிப்பு திறன் உயர்த்தி, நிலத்தடி நீர் புதிய பெருக்கத்தையும் ஊக்குவிக்கும். மேலும், திடக் கழிவு மேலாண்மைக்கான லைட் கமர்ஷியல் வாகனங்கள் வாங்க ரூ.20 லட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது; இது சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நேரடி பலன் அளிக்கும். "கடலூர் சமூகத்தில் அடையாளம் காணப்பட்ட முக்கிய தேவைகள் நீர் பாதுகாப்பு மற்றும் திறமையான கழிவு மேலாண்மை ஆகியவற்றை இந்தத் திட்டங்கள் நேரடியாக தீர்வு செய்கின்றன," என்று கோவெஸ்ட்ரோ (இந்தியா) கடலூர் தளத் தலைவர் ஜெகநாதன் கண்மணி தெரிவித்தார். இந்த முயற்சிகள், உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒருங்கிணைத்து மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# டெக்ஸியன் இந்தியா, 850+ இருக்கைகள் கொண்ட புதிய சென்னை அலுவலகத்தை திறந்து வைத்து, உலகளாவிய விநியோகம் மற்றும் புதுமை திறன்களை வலுப்படுத்தியது!

சென்னை , பிப். 06–

டெக்ஸியன் இந்தியா சார்பில் பேசிய குமார் ராஜகோபாலன் அவர்கள், "சென்னையில் திறக்கப்பட்ட இந்த புதிய 850+ இருக்கைகள் கொண்ட அலுவலகம், எங்கள் பொறுப்புள்ள வளர்ச்சி, உள்ளூர் திறமைகளை வளர்த்தல் மற்றும் நீண்ட கால திறன் மேம்பாட்டிற்கான உறுதியை வெளிப்படுத்துகிறது" என்று கூறினார். அவர் மேலும், "சிறிய ஆதரவு மையமாகத் தொடங்கிய டெக்ஸியன் இந்தியா, இன்று ஆறு நகரங்களில் ஏழு அலுவலகங்களுடன், 2,000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கொண்ட நிறுவனமாக வளர்ந்து, அமெரிக்கா மற்றும் பிற சர்வதேச சந்தைகளுக்கான உலகளாவிய விநியோகம், செயல்பாடுகள் மற்றும் புதுமை மையம் செயல்பட்டு வருகிறது" என்றும் குறிப்பிட்டார்.

அவரது பேச்சில், புதிய சென்னை அலுவலகம் டிஜிட்டல் பொறியியல், தரவு மற்றும் பகுப்பாய்வு, கிளவுட் மாற்றம், சைபர் பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தீர்வுகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்ப துறைகளில்




முக்கிய பங்கு வகிக்கும் என வலியுறுத்தினார். "இந்த மையத்தின் மூலம், இந்திய இளைஞர்களின் தொழில்நுட்ப திறனை உலகளாவிய அளவில் வெளிப்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்குகிறோம்" எனவும் அவர் தெரிவித்தார். மேலும், டெக்ஸியன் இந்தியா உருவாக்கிய AgriIQ என்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வேளாண் நுண்ணறிவு தளம் குறித்து அவர் பேசினார். "AgriIQ மூலம், அரசு, நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுக்கு உள்ளூர் சூழலை அடிப்படையாகக் கொண்ட நேரடி தகவல் மற்றும் உள்நோக்கங்களை வழங்கி, உற்பத்தித் திறன் மற்றும் நிலைத்தன்மையை உயர்த்த உதவுகிறோம். 'In the Business for Good' என்ற எங்களின் நோக்கத்துக்கு ஏற்ப, இந்தியாவிலிருந்து உலகத்தி ற்கான நல்ல மாற்றங்களை உருவாக்கும் முயற்சிகளை இந்த புதிய சென்னை அலுவலகம் மேலும் வேகப்படுத்தும்" என்று அவர் தெரிவித்தார்.

# OPPO Reno15c அறிமுகம்: சக்திவாய்ந்த பேட்டரி, AI கேமரா, பிரீமியம் டிசைன் அனைவருக்கும் முழுமையான ரெனோ அனுபவம்!

கோயம்புத்தூர், பிப். 06–

OPPO இந்தியா தனது Reno15 Series வரிசையை விரிவுபடுத்தும் வகையில் புதிய Reno15c ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்தியுள்ளது. பயணம், புகைப்படம், வீடியோ உருவாக்கம் போன்றவற்றில் ஆர்வம் கொண்ட பயனர்களுக்கு முழுமையான 'Reno Expe–rience' வழங்கும் நோக்கில் இந்த மாடல் வடிவமைக்கப்பட்டுள்ளது. 7000 mAh பேட்டரி, 80W SUPERVOOC™ ஃபாஸ்ட் சார்ஜிங், 6.57" AMOLED டிஸ்ப்ளே, Snapdragon® 6 Gen 1 பிராசஸர், மற்றும் ColorOS 16 ஆகிய அம்சங்களுடன், மெலிதான மற்றும் பிரீமியம் டிசைன் இந்த போன் வருகிறது. Af–terglow Pink மற்றும் Twilight Blue நிறங்களில் பிப்ரவரி 5 முதல் இது விற்பனைக்கு கிடைக்கும்.

புகைப்படம் மற்றும் வீடியோ உருவாக்கத்தை மையமாகக் கொண்டு, Reno15c மாடலில் 50MP மெயின் கேமரா, 8MP அல்ட்ரா–வைட், 2MP மேக்ரோ மற்றும் 50MP அல்ட்ரா–வைட் செல்ஃபி கேமரா வழங்கப்பட்டுள்ளது. 4K HDR 60fps வீடியோ பதிவு, Ultra–Steady Video, Dual–View Video, மற்றும் AI Editor 3.0 போன்ற வசதிகள் கிரியேட்டர்களுக்கு ஸ்டுடியோ தரமான அனுபவத்தை தருகிறது. All–Round Armour Body, IP66/68/69 பாதுகாப்பு, AI HyperBoost, AI Link Boost மற்றும் Google Gemini




இணைந்த AI அம்சங்கள் ஆகியவை இதன் பயன்பாட்டை மேலும் பலப்படுத்துகின்றன.

OPPO இந்தியா சார்பில் பேசிய Damon Yang, Pres–ident, OPPO India கூறுகையில், "Reno Series எப்போதும் டிசைன், கேமரா மற்றும் பயனர் அனுபவத்தை புதிய அளவுகோல்களை அமைத்துள்ளது. Reno15c மூலம் அந்த அனுபவத்தை மேலும் பலருக்கும் கொண்டு செல்கிறோம். நீண்ட நேர பேட்டரி, சக்தி வாய்ந்த AI கருவிகள் மற்றும் கிரியேட்டர்களுக்கேற்ப கேமரா திறன்கள் ஆகியவை, இன்றைய தலைமுறையின் வேகமான வாழ்க்கை முறைக்கு சிறந்த துணையாக இருக்கும்," என்றார். Re–no15c 8GB+256GB மாடல் ரூ.34,999 மற்றும் 12GB+256GB மாடல் ரூ.37,999 விலையில் Ama–zon, Flipkart, OPPO e–store மற்றும் ரீட்டெயில் கடைகள் சலுகைகளுடன் கிடைக்கிறது.

# ஹெச்பி இண்டிகோ மற்றும் ஹெச்பி இண்டஸ்ட்ரியல் 3D பிரிண்டிங் தீர்வுகளுக்கான சிறப்பு மையத்தை ரெடிங்டன் சென்னையில் தொடங்கியது!


சென்னை . பிப். 06–

ரெடிங்டன் லிமிடெட், ஹெச்பி இண்டிகோ மற்றும் ஹெச்பி இண்டஸ்ட்ரியல் 3D பிரிண்டிங் சொல்யூஷன் களுக்கு சிறப்புமிக்க மையத்தை (Centre of Ex–cellence) சென்னையில் தொடங்கியுள்ளது. 20,000 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இந்த மையம், டிஜிட்டல் பிரிண்டிங் மற்றும் தொழில்துறை 3D உற்பத்தி தொழில்நுட்பங்கள் நேரடியாக அனுபவிக்கும், பரிசோதிக்க மற்றும் மதிப்பீடு செய்யும் டெமோ மற்றும் அனுபவ தளமாக உருவாக்கப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கள், பிராண்டுகள், அச்சு சேவை வழங்குநர்கள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை




பங்குதாரர்கள் இணையும் திறந்த, கூட்டு தளமாக இது செயல்படும். இந்த மையத்தில் ஹெச்பி இண்டிகோ 18K, 7K டிஜிட்டல் பிரஸ்கள் மற்றும் ஹெச்பி ஜெட் ஃப்யூஷன் 5600 3D பிரிண்டர் உள்ளிட்ட அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்கள் நிறுவப்பட்டுள்ளன. தயாரிப்பு தகுதி சோதனை, பயன்பாடு சோதனை, பணிப்பாய்வு மேம்பாடு மற்றும் உற்பத்தி அளவீடு போன்ற வசதிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் டிஜிட்டல் உற்பத்தி தேவைகளு க்கான சரியான தீர்வுகளை தேர்வு செய்ய முடியும்.

"டிஜிட்டல் மற்றும் 3D பிரிண்டிங் தொழில் நுட்பங்களின் நிஜ உலக தாக்கத்தை வாடிக்கையாளர்கள் தெளிவாகக் காணக்கூடிய அனுபவ தளமாக இந்த CoE வடிவமைக்கப்ப ட்டுள்ளது," என்று ரெடிங்டன் லிமிடெட் டிஜிட்டல் பிரிண்டிங் துணைத் தலைவர் ரமேஷ் கே.எஸ். தெரிவித்தார். "இந்திய அச்சு சூழலுக்கான எங்கள் நீண்டகால அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது," என்று ஹெச்பி இண்டஸ்ட்ரியல் மற்றும் இன்க்ஜெட் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பிரிவு தலைவர் பவன் சவுகான் கூறினார்.



## குலதெய்வத்தை வழிபட உகந்த நேரமும் ரகசிய முறைகளும்..!!



வாழ்க்கையில் தொடர் சோதனைகளையும், தீர்க்க முடியாத பிரச்சனைகளையும் சந்திப்பவர்களுக்கு குலதெய்வ வழிபாடு ஒரு மிகச்சிறந்த கேடயமாக கருதப்படுகிறது. "குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறக்காதே" என்ற பழமொழிக்கு ஏற்ப, நம் முன்னோர்கள் வழிபட்ட தெய்வத்தின் அருளாசி இருந்தால் மட்டுமே மற்ற தெய்வங்களின் அனுக்கிரகம் நமக்கு கிடைக்கும் என்பது ஐதீகம். அந்த வகையில், எந்தெந்த நாட்களில் குலதெய்வத்தை வணங்கி னால் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்பதை இங்கே காண்போம்.

**விசேஷ தினங்கள் மற்றும் வழிபாட்டு முறை :**

பொதுவாக குலதெய்வத்தை வழிபட எல்லா நாட்களுமே உகந்தவை என்றாலும், அமாவாசை மற்றும் பௌர்ணமி ஆகிய தினங்கள் மிக முக்கியமானவை. இந்த நாட்களில் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று, அந்தத் தெய்வத்திற்கு பிடித்தமான நெய்வேத்தியங்களைப் படைத்து வழிபடுவது குடும்பத்தில் உள்ள கஷ்டங்களைப் படிப்படியாக நீக்கும். தொலைதூரத்தில் கோயில் இருப்பதால் அடிக்கடி செல்ல முடியாதவர்கள், தங்கள் வீட்டிலேயே தினமும் காலை மற்றும் மாலை வேளைகளில் குலதெய்வத்தை மனதார நினைத்து நெய் விளக்கேற்றி வழிபடலாம். இது கோயிலுக்கு சென்ற அதே பலனை தரும்.

கிழமை வாரியான வழிபாட்டு ரகசியங்கள் : அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் செல்ல முடியாதவர்கள், வாரத்தின் மற்ற நாட்களில் தங்கள் குலதெய்வத்தின் தன்மைக்கு ஏற்பத் தரிசனம் செய்யலாம்:

ஞாயிறு மற்றும் வியாழன் : இவை பொதுவான விசேஷ நாட்கள். எந்த குலதெய்வமாக இருந்தாலும் இந்நாட்களில் செல்வது நற்பலன் தரும்.

திங்கள் : உங்கள் குலதெய்வம் சிவபெருமான் அல்லது முனீஸ்வரர் போன்ற காவல் தெய்வங்களாக இருந்தால் திங்கட்கிழமை உகந்தது.


செவ்வாய் : முருகப்பெருமான் அல்லது அது சார்ந்த தெய்வங்களுக்குச் செவ்வாய்க்கிழமை சிறப்பு.

புதன் மற்றும் சனி : பெருமாளை குலதெய்வமாக கொண்டவர்கள் இந்நாட்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

வெள்ளி : மாரியம்மன், காளியம்மன் போன்ற அம்பாள் வடிவங்கள் மற்றும் பெண் தெய்வங்களுக்கு வெள்ளிக்கிழமை மிகச் சிறந்த அருளைப் பெற்றுத் தரும்.

வழிபாட்டின் பலன்கள் : குலதெய்வ கோயிலுக்கு மாதம் ஒருமுறையோ அல்லது வருடம் ஒருமுறையோ குடும்பத்தோடு சென்று வருவதன் மூலம் வம்ச விருத்தி, ஆரோக்கியம் மற்றும் தடைப்பட்ட காரியங்களில் வெற்றி போன்றவை கிட்டும். சோதனைகள் சூழும் போது கலங்காமல், உரிய நாட்களில் குலதெய்வத்தை சரணடைவதே மகிழ்ச்சியான வாழ்விற்கு வழியாகும்.

# Naruto உடன் கைகோர்த்த பிரிட்டானியா ட்ரீட் கிரீம் வேஃபர்: ஸ்பெஷல் எடிஷன் பேக்குகள் மற்றும் AR பிரச்சாரம் அறிமுகம்!





வேலூர் , பிப். 06–

பிரிட்டானியா ட்ரீட் கிரீம் வேஃபர் நிறுவனம், Sony YAY!யின் உலகளாவிய அனிமே ஐகானான Naruto உடன் இணைந்து, Naruto தீமையான சிறப்பு எடிஷன் பேக்குகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் அனிமே ரசிகர்களை நேரடியாக இணைக்கும் முயற்சியை உருவாக்கப்பட்ட இந்த கூட்டாண்மை, FMCG துறையின் முன்னோடியான முயற்சியாக பார்க்கப்படுகிறது. Schbang வடிவமைத்த #TreatItJutsuIt–WinIt பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, பேக்கில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து AR அடிப்படையிலான Jutsu கை முத்திரை சவாலில் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த டிஜிட்டல் அனுபவம் மூலம் ரசிகர்கள் Naruto உலகத்தை கேம் ஃபைட் முறையில் அனுபவிக்க முடியும்; வெற்றி பெற்றவர்கள் பிரத்யேக Naruto பரிசுகளை வெல்லும் வாய்ப்பைப் பெறுகின்றனர். "இந்திய இளைஞர்களிடம் அனிமே ஒரு வலுவான கலாச்சார தாக்கத்தை உருவாக்கியுள்ளது. Naruto உடனான இந்த கூட்டணி, நுகர்வோரின் அர்த்தமுள்ள மற்றும் கலாச்சார ரீதியான இணைப்பை உருவாக்கும் ஒரு முயற்சியாகும்," என்று பிரிட்டானியாவின் மார்க்கெட்டிங் பொது மேலாளர் சித்தார்த் குப்தா தெரிவித்துள்ளார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### பக்கவாதம் ஏன் ஏற்படுகிறது? அறிகுறிகள் என்ன..



ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான மக்கள் பக்கவாதத்தால் (Stroke) பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, பக்கவாதத்தை குணப்படுத்த பல்வேறு மருந்துகள் தற்போது இருந்து வந்தாலும், அதனை குணப்படுத்துவது என்பது நீண்ட காலத்தை எடுக்கும்.

பக்கவாதம் என்பது மூளைக்குச் செல்லும் ரத்த ஓட்டம் தடைபடுவதாலோ அல்லது ரத்தக் கசிவு ஏற்படுவதாலோ ஏற்படுகிறது. இதனால், மூளை செல்கள் சேதமடைகின்றன. இதனால், பக்கவாதம் ஏற்படுகிறது.

மூளையில் ரத்த ஓட்டம் தடைபடுவதற்கு பல காரணங்கள் உள்ளன. இதில் பெரும்பாலானோருக்கு ரத்த ஓட்டத்தில் ஏற்படும் அடைப்பால் பக்கவாதம் ஏற்படுகிறது. ரத்தக்குழாய்களில் ஏற்படும் கசிவாலும் பக்கவாதம் ஏற்படும். மூளைக்குள் உள்ள ரத்த குழாய்களில் நாளடைவில் அடைப்பு ஏற்படுவதால் பக்கவாதம் ஏற்படலாம்.

இதுவே உடலில் கட்டி ஏற்பட்டு, அது உடைந்து, மூளைக்கான ரத்த நாளங்களுக்கு சென்று அடைப்பு ஏற்படுவதே ஸ்ட்ரோக் என அழைக்கப்படுகிறது. பக்கவாதத்திற்கான அறிகுறிகளை பொறுத்தவரை, மங்கலான பார்வை, பேசுவதில் சிரமம், குழப்பம், தலைவலி, தலைச்சுற்றல், முகத்தின் ஒருபகுதியில் தடை கட்டுப்பாட்டை இழத்தல், மறதி, மனநிலை மாற்றங்கள், குமட்டல், வாந்தி, வலிப்புத்தாக்கங்கள், கேட்டல் திறன் குறைவது போன்றறை ஆகும்.

மூளைக்கு செல்லும் ரத்த ஓட்டம் தடைபடும்போது பேச்சுப் பகுதி பாதிக்கப்பட்டு பேச்சுகள் குளறலாம். மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால், உடனே மருத்துவரை அணுகுவது சிறந்தது. இதற்காக முறையான சிகிச்சை நீங்கள் கட்டாயம் பெற வேண்டும். பக்கவாதம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்றால் மூளைக்கு சரியான அளவு ரத்த ஓட்டம் கிடைக்காத வரை பக்கவாதம் நீடிக்கும். பக்கவாதம் ஏற்பட்ட நிமிடத்தில் இருந்து 3 மணி நேரத்திற்குள் எவ்வளவு விரைவாக மருத்துவமனைக்கு அவர்களை அழைத்து செல்கிறீர்களோ நல்லது. இதன் மூலம், அவர்களை பழைய நிலைக்கு நம்மால் அழைத்து செல்ல முடியும். பக்கவாதத்தை வராமல் எப்படி தடுக்கலாம் என்றால், ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடுவது மட்டுமே. புகைப்பிடிப்பது, மது அருந்துவது போன்ற பழக்கங்களை கைவிட வேண்டும். ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி போன்றவையால் பக்கவாதம் ஏற்படுவதை தடுக்கலாம். (பொறுப்பு துறப்பு: இந்தச் செய்தி உங்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இதை எழுதுவதில் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களின் உதவியை நாங்கள் பெற்றுள்ளோம்.

# ரேஷன் கடைகளில் அதிரடி மாற்றம்..!! இனி பொருட்களுக்கு பதில் பணம்..!!





சென்னை, பிப். 06–

இந்தியாவின் பொது விநியோக திட்டத்தில் புரட்சிகரமான மாற்றங்களை செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. தற்போதைய முறையில் ரேஷன் கடைகள் வழியாக வழங்கப்படும் அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குப் பதிலாக, அதற்கான தொகையை நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தும் புதிய நடைமுறையை கொண்டுவர ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் சுமார் 80 கோடி மக்கள் பயனடைந்து வரும் நிலையில், இதில் நடக்கும் முறைகேடுகளை களையவே இந்த மாற்றம் கொண்டுவரப்படுகிறது. குறிப்பாக, தகுதியற்ற நபர்கள் மற்றும் போலி ரேஷன் கார்டுகள் மூலம் அரசு நிதி வீணாவதை தடுப்பதே இதன் முதன்மை நோக்கமாகும். கார் வைத்திருப்பவர்கள் மற்றும் வருமான வரி செலுத்துபவர்கள் போன்றோர் இந்த இலவச திட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுத்து, உண்மையான ஏழைகளுக்குப் பலன் கிடைப்பதை உறுதி செய்ய அரசு முனைகிறது.

இந்த திட்டத்திற்காக 'இ–ரூபி' (e–RUPI) என்ற நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது. அதன்படி, பயனாளிகளின் மொபைல் எண்ணிற்கு மாதந்தோறும் குறிப்பிட்ட மதிப்பிலான டிஜிட்டல் டோக்கன்கள் அல்லது வவுச்சர்கள் அனுப்பப்படும். ஒரு குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை பொறுத்து இந்த தொகை நிர்ணயிக்கப்படும். இந்த வவுச்சர்களை கொண்டு ரேஷன் கடைகளிலோ அல்லது வெளிச் சந்தையிலோ பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். விருப்பமில்லாதவர்கள் அந்த வவுச்சரை பணமாக மாற்றித் தங்கள் வங்கி கணக்கில் வரவு வைத்துக்கொள்ளும் வசதியும் இதில் இருக்கும் என கூறப்படுகிறது.

தற்போது சண்டிகர் மற்றும் புதுச்சேரி போன்ற யூனியன் பிரதேசங்களில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம், வெற்றிபெறும் பட்சத்தில் நடப்பாண்டிலேயே நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படலாம். இருப்பினும், இதற்கு ரேஷன் கடை விநியோகஸ்தர்கள் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. "இந்த திட்டம் ஊழியர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்பதோடு, வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் பணம் முறையான உணவுத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுமா அல்லது மது போன்ற தேவையற்ற செலவுகளுக்குச் செல்லுமா?" என்ற அச்சத்தையும் சமூக ஆர்வலர்கள் முன்வைக்கின்றனர்.

# அங்கன்வாடி சுட்டிகளுக்கு ஜாக்பாட்..!! மே மாதம் முழுவதும் கோடை விடுமுறை..!!





சென்னை, பிப். 06–


தமிழ்நாட்டில் அக்னி நட்சத்திரம் தொடங்கும் முன்பே வெயிலின் தாக்கம் சுட்டெரிக்க தொடங்கியுள்ள நிலையில், பச்சிளம் குழந்தைகளின் உடல்நலனைப் பாதுகாக்கும் நோக்கில் தமிழக அரசு ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வரும் மே மாதம் முழுவதும் கோடை விடுமுறை அளித்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அதிகாரப்பூர்வ உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் வெப்ப அலைகளின் தாக்கம் உச்சத்தில் இருப்பதால், அங்கன்வாடிக்கு வரும் சிறு குழந்தைகள் உடல்நலப் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, வரும் மே 1–ம் தேதி முதல் மே 31–ம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு அனைத்து அங்கன்வாடி பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அரசாணை மாவட்ட வாரியாக உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வெயிலின் கொடுமையால் குழந்தைகள் சோர்வடைவதை தவிர்க்க அரசு எடுத்துள்ள இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்து பெற்றோர்கள் வரவேற்றுள்ளனர். "குட்டிப் பட்டாளங்களே, உங்க சம்மர் ஹாலிடேஸ் கொண்டாட்டத்துக்குத் தயாராகுங்கள்" என்று சொல்லும் வகையில் அமைந்துள்ள இந்த அறிவிப்பு, சுட்டிப் குழந்தைகளுக்குப் பெரும் உற்சாகத்தை தந்துள்ளதாக தெரிகிறது.

விடுமுறை காலத்தில் குழந்தைகளை நேரடியாக வெயிலில் விளையாட அனுமதிக்க வேண்டாம் என்றும், அவர்களுக்குப் போதிய அளவு நீர்ச்சத்து மிகுந்த ஆகாரங்களை வழங்குமாறும் சுகாதாரத் துறை பெற்றோர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. ஜூன் மாதம் வெயிலின் தாக்கம் குறைந்த பிறகு மீண்டும் மையங்கள் வழக்கம் போல் செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிப்.13-ல் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கூடுகிறது!






சென்னை, பிப். 06–


காவிரி மேலாண்மை ஆணையத்தின் 48 ஆவது கூட்டம் தில்லியில் வரும் 13 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம், அதன் தலைவர் எஸ்.கே. ஹல்தார் தலைமையில் தில்லியில் உள்ள அந்த ஆணையத்தின் அலுவலகத்தில் பிப். 13 ஆம் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு தமிழகம், கர்நாடகம் ,கேரளம் மற்றும் புதுச்சேரி நீர் வளத்துறை அதிகாரிகளுக்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் தகவல் அனுப்பியுள்ளது. காவிரியில் இருந்து மாதாந்திர நீர் திறப்பு குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது. காவிரி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்திற்கு திறந்து விட வேண்டிய தண்ணீரை உறுதி செய்வதற்காக இக்கூட்டம் நடைபெறுகிது

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவது தொடர்பான விவகாரத்தில் கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கை மீது காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு மற்றும் தமிழகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட மாநிலங்களின் விளக்கத்தின் அடிப்படையில் மத்திய நீர்வள ஆணையம் இறுதி முடிவு எடுக்கும் என கடந்த ஆண்டு 2025 நவம்பர் 13 ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது.

# துணைத் தேர்தல் ஆணையர் 11-ம் தேதி தமிழகம் வருகை!





சென்னை, பிப். 06–

இறுதி வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணிகளை ஆய்வு செய்ய, துணைத் தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் எத்துரு வரும் பிப்.11–ம் தேதி சென்னை வருகிறார். இங்கு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்து கருத்து கேட்க இருப்பதாகவும், வார்டு மறுவரையறை தொடர்பாக ஆலோசிக்க இருப்பதாகவும் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாவது எப்போது? பியூஷ் கோயல்!!








டெல்லி, பிப். 06–

கடந்த இரண்டாம் தேதி அன்று அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்திய பொருட்களுக்கான இறக்குமதி வரியை 18 சதவீதமாக குறைத்து அறிவிப்பு வெளியிட்டார். இது இந்தியாவை சேர்ந்த லட்சக்கணக்கான ஏற்றுமதியாளர்களுக்கும் அதை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கும் பெரும் நிம்மதியை ஏற்படுத்தி தந்தது. அதோடு கூடிய விரைவில் இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக போகிறது என்ற தகவலும் வெளியானது.

இந்த நிலையில் மத்திய வணிகத்துறை அமைச்சர் பியுஷ் கோயல் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே மார்ச் மாதம் மத்தியிலேயே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்ற தகவலை வெளியிட்டு இருக்கிறார். இது தொடர்பாக இரு நாடுகளும் அடுத்த நான்கு முதல் ஐந்து நாட்களுக்குள் கூட்டறிக்கை வெளியிடப் போகிறது என்ற தகவலையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.



# திமுகவின் தேர்தல் அறிக்கை மார்ச் முதல் வாரத்தில் வெளியாகிறது!

சென்னை, பிப். 06–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடக்க உள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளை திமுக முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது. தேர்தல் அறிக்கை தயாரிக்க கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி.தலைமையில் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு தரப்பின் கருத்துகளை கேட்டறிந்து வருகிறது.

அதன்படி திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம் கடந்த 2 நாட்களாக சென்னை அறிவாலயத்தில் நடைபெற்றது.. இந்த அறிக்கை தயாரிக்கும் பணிகளை முடித்துமார்ச் முதல் வாரத்தில் தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் எனகட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.



## இன்றே கடைசி?

# சேலத்தில் த.வெ.க கூட்டம்- வழிகாட்டு நெறிமுறை குறைகளை நிவர்த்தி செய்ய!

சென்னை, பிப். 06–

சேலத்தில் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி அனுமதிக்கு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ள குறைகளை இன்றே நிவர்த்தி செய்து கொடுத்தால் மட்டுமே மக்கள் சந்திப்பு கூட்டத்திற்கு அனுமதி கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வழக்கமாக 10 நாட்களுக்குள் மனு கொடுத்தால் மட்டுமே அனுமதி கிடைக்கும் பட்சத்தில், கூட்டத்திற்கு இன்னும் 6 நாட்கள் உள்ள நிலையில், சேலம் மாநகரில் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டம் நடத்துவதில் சிக்கல் நீடிக்கிறது.

# வேலை வாய்ப்பு

## தமிழக அரசு கலை கல்லூரிகளில் 426 காலியிடங்கள்

**TN Govt Arts and Science College Recruitment 2026**

- Vacancy: 426
- Post Name: Guest Lecturer
- Qualification: Postgraduate (PG) / Ph.D. / SET / SLET / NET / NET-JRF
- Selection Process: Short Listing, Interview


Organization Name: Tamilnadu Government Arts and Science Colleges
Job Category: Tamilnadu Govt Jobs
Employment Type: Temporary Basis
Total No of Vacancies: 426 Guest Lecturers Posts
Place of Posting: Tamilnadu
Starting Date: 04.02.2026
Last Date: 09.02.2026 @ 05.00 PM
Apply Mode: Online
Official Website: https://tngasa.org/



தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம், தே.ரங்கநாதபுரம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் ஓடபள்ளி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



## சினிமா துளிகள்..!

### 2-வது சிம்பொனி பற்றி இளையராஜா?




பிரபல இசை அமைப்பாளரான இளையராஜா, 2–வது சிம்பொனியை எழுதி முடித்துவிட்டதாக இளையராஜா தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறும்போது, "புதிய ஸ்டூடியோவுக்கு வந்து பிப்.3–ம் தேதியுடன், 5 ஆண்டுகள் நிறைவடைகிறது. என்னுடைய 2–வது சிம்பொனியை பெரும்பாலும் எழுதி முடித்துவிட்டேன்" எனக் கூறியுள்ளார்.

### மகன்களுக்கு திடீர் மொட்டை.. திருச்செந்தூரில் சிவகார்த்திகேயன்!





நடிகர் சிவகார்த்திகேயன், தனது குடும்பத்துடன் திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமி கோவிலில் சாமி தரிசனம் செய்துள்ளார். இந்த பயணத்தின் போது, தனது இரண்டு மகன்களுக்கும் முடி காணிக்கை செலுத்தி, குடும்பத்தோடு கோவில் வளாகத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை அவரது மனைவி ஆர்த்தி, தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# விஜய்க்கு ரூ.1.50 கோடி அபராதம் விதித்தது செல்லும்: ஐகோர்ட்!



சென்னை, பிப். 06–

வருமான வரித்துறை ரூ.1.50 கோடி அபராதம் விதித்ததை எதிர்த்து விஜய் தொடர்ந்த வழக்கை சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்தது. நடிகர் விஜய் தனது நடிப்பில் வெளியான 'புலி' பட வருமானத்தில் ரூ. 15 கோடியை கணக்கில் காட்டவில்லை என வருமான வரித்துறை புகார் கூறியிருந்தது. இவ்வாறு வருமானத்தை மறைத்த குற்றத்துக்காக, வருமான வரித்துறை ரூ.1.50 கோடி அபராதம் விதித்தது. இதை எதிர்த்து விஜய் தொடர்ந்த வழக்கில், (பிப்ரவரி 06) காலை 10:30 மணிக்கு சென்னை ஐகோர்ட் தீர்ப்பு அளித்தது. விஜய் தொடர்ந்த மனுவை தள்ளுபடி செய்த ஐகோர்ட், விஜய்க்கு வருமான வரித்துறை 1.50 கோடி ரூபாய் அபராதம் விதித்தது செல்லும் என தீர்ப்பு அளித்தது. அரசியல்கட்சிதொடங்கியுள்ள விஜய்க்கு இந்த தீர்ப்பு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

# த.வெ.க. தேர்தல் அறிக்கை: பொதுமக்களிடம் கருத்து கேட்க இணையதளம் தொடக்கம்!



சென்னை, பிப். 06–

தமிழகத்தில் அடுத்த 2 மாதத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல் முறையாக நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் களம் இறங்குகிறது. ஆட்சியில் பங்கு என்ற அதிரடி அறிவிப்புடன் கூட்டணி கதவை திறந்து வைத்திருந்தாலும் இன்னும் த.வெ.க. கூட்டணிக்கு யாரும் வரவில்லை. தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணியில் அதிருப்தி அடையும் கட்சிகள் த.வெ.க. பக்கம் திரும்பும் என்று தெரிகிறது.

இந்த நிலையில், ஆளுங்கட்சியான தி.மு.க.வில் தேர்தல் அறிக்கை தயாரிப்பு பணி வேகமாக நடந்து வருகிறது. எதிர்க்கட்சியான அ.தி.மு.க. அதற்கு ஒருபடி மேலேபோய், தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள 10 அறிவிப்புகளை 2 கட்டங்களாக வெளியிட்டுவிட்டது. பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளிலும் தேர்தல் அறிக்கை தயாரிக்க குழு அமைத்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், தமிழக வெற்றி கழகம் தேர்தல் அறிக்கைக்காக பொதுமக்கள் பரிந்துரைகளை தெரிவிக்க இணையதளம் இன்று மாலை 6 மணிக்கு தொடங்கப்பட்டுள்ளது. அதுதொடர்பாக, தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தமிழ்நாட்டின் வருங்காலம் நீங்கள் இல்லாமல் இல்லை. மக்கள் தலைவரின் ஆட்சி உங்களுக்கானது மட்டுமல்ல, உங்களுடைய பரிந்துரைகளாலும் ஆனது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி tvk-manifesto2026.com என்ற இணையதளம் வாயிலாக பொதுமக்கள் தங்கள் பரிந்துரைகளை தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சபரிமலை தங்கம் திருட்டு விவகாரம் - ரூ.2 கோடியை நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த தந்திரி!



திருவனந்தபுரம், பிப். 06–

சபரிமலையில் தங்கம் கொள்ளை போன விவகாரம் கேரளாவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் சபரி மலை முதன்மை தந்திரி கண்டரரு ராஜீவரு உள்பட 12 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

சிறையில் உள்ள தந்திரி கண்டரரு ராஜீவரிடம் சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தங்கம் கொள்ளை தொடர்பாக உன்னிகிருஷ்ணன் போற்றி மூலமாக ரூ.2 கோடி பெற்றதாக தகவல் வெளியானது. இந்த பணத்தை தந்திரி திருவல்லாவில் இயங்கி வந்த ஒரு தனியார் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்ததாக கூறப்பட்டது. ஆனால் அந்த நிதி நிறுவனம் தற்போது நஷ்டம் காரணமாக மூடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தந்திரி முதலீடு செய்த பணம் தொடர்பாக அமலாக்கத்துறை அதிகாரிகள் மூடப்பட்ட நிதி நிறுவனத்திலும், அதை நடத்தி வந்த என்.எம்.ராஜூ வீட்டிலும் அதிரடி சோதனை நடத்தினர். நிதி நிறுவனம் நடத்தி மோசடி செய்த வழக்கில் ராஜூ ஏற்கனவே போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் தந்திரி முதலீடு செய்ததாக கூறப்படும் ரூ.2 கோடி தொடர்பாக எந்த புகாரும் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# போலி இந்திய மருந்துகளை சட்டவிரோதமாக விற்ற 200 இணையதளங்கள் அமெரிக்காவில் முடக்கம்!



அமெரிக்கா, பிப். 06–

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் மற்றும் இந்திய நிறுவனங்களால் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் இந்திய மருந்துகளுக்கு அமெரிக்காவில் எப்போதும் கிராக்கி இருக்கிறது.

அமெரிக்காவில் இந்திய மருந்துகள் அதிக மதிப்பும் தேவையும் பெறுவதற்குக் காரணம் அவற்றின் உயர்தர தரநிலைகள், குறைந்த செலவு, மற்றும் நம்பகமான உற்பத்தித் திறன் ஆகும்.

உலகத் தரச் சான்றிதழ்களுடன் தயாரிக்கப்படும் இந்திய மருந்துகள், தரத்தில் எந்த சமரசமும் இன்றி மலிவான சிகிச்சையை வழங்குகின்றன. இதனால் அமெரிக்காவின் சுகாதார அமைப்பில் இந்திய மருந்துகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன.

இந்நிலையில் அமெரிக்காவில் பல்வேறு இணையதளங்கள் மூலமாக போலியான இந்திய மருந்துகள் சட்டவிரோதமாக விற்கப்படுவது குறித்து புகார்கள் எழுந்தன. மேலும் டாக்டர்கள் பரிந்துரை இல்லாமல் இந்த மருந்துகளை உட்கொண்ட 10 பேர் உயிரிழந்தது குறித்து அந்த நாட்டின் போதைப்பொருள் தடுப்பு பிரிவு விசாரித்தது.

இதற்காக இந்தியாவின் அமலாக்கத்துறையும் அமெரிக்க புலனாய்வு நிறுவனம் தகவல்கள் பெற்றது. அதன்படி இந்தியாவின் இயங்கி வந்த ஒரு சர்வதேச குற்றவியல் கும்பலுக்கு சொந்தமான 200–க்கும் மேற்பட்ட இணையதளங்கள் மூலமாக அமெரிக்காவில் அந்த போலி மருந்துகளை சட்டவிரோதமாக விற்றது தெரிய வந்தது.

இந்த இணையதளங்கள் முறையான டாக்டர் பரிந்துரை சீட்டு இன்றி, போலியான மற்றும் தடை செய்யப்பட்ட மருந்துகளை விற்பனை செய்து வந்துள்ளன. இந்த இணையதளங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்ட பல மாத்திரைகளில் உயிருக்கு ஆபத்தான பொருட்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து போலி இந்திய மருந்துகளை விற்ற 200 இணையதளங்கள் அமெரிக்காவில் முடக்கப்பட்டன. நியூயார்க்கில் இருந்த இந்தியர்கள் உள்பட 4 பேர் இதுதொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# போராடினால் பணி நீக்கம்: பணியாளர்களுக்கு மிரட்டல்!

வேலூர், பிப். 06–

தமிழகம் முழுவதும், மூன்று நாட்களாக அங்கன்வாடி பணியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால், வேலூர் மாவட்டத்தில், முதல் 2 நாட்களாக போராட்டம் நடைபெறவில்லை. மூன்றாவது நாளான நேற்று, வேலூர் கலெக்டர் அலுவலகம் அருகே, தமிழ்நாடு மாநில அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தினர், பணி நிரந்தரம் கோரி காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்ட செயலர் ஜோலி கூறியதாவது:

வேலூர் மாவட்டத்தில் இரு நாட்களாக போராட்டம் நடக்கவில்லை. வட்டார திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள்



வளர்ச்சி திட்ட அலுவலர் ஆகியோர், அங்கன்வாடி பணியாளர்களை மிரட்டி பணிய வைத்து உள்ளனர். போராடினால் கிரிமினல் வழக்கு பதியப்படும். சம்பளம் பிடித்தம், பணி நீக்கம் என, மிரட்டி உள்ளனர். இந்த அழுத்தங்களை கடந்து அங்கன்வாடி பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். நாங்கள், 51 ஆண்டுகளாக அங்கன்வாடியில் பணியாற்றி வருகிறோம். வேலூர் மாவட்டத்தில் 150 காலி பணியிடங்கள் உள்ளன. இவற்றை நிரப்ப வேண்டும். எங்களுக்கு கூடுதல் பணி சுமை உள்ளதால், பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஒடிசாவில் திடீர் விபத்து: சென்னை எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டது: 3 பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு இறங்கின!



புவனேஸ்வர், பிப். 06–

சென்னை சென்ட்ரலில் இருந்து ஜல்பைகுரிக்கு எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று சென்றது. இந்த ரயில் நேற்று காலை ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டம், ஜகாபுரா ரயில் நிலையம் அருகே சென்று கொண்டிருந்தது. அப்போது ரயிலின் 3 பெட்டிகள் திடீரென தடம் புரண்டன.

இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை, உயிரிழப்புகள் எதுவும் இல்லை. விபத்தில் ஒரு ஏசி பெட்டியும் 2 பொது பெட்டிகளும் தண்டவாளத்தை விட்டு விலகின. இதனால் பயணிகள் அச்சத்தில் ஆழ்ந்தனர். விபத்து நடந்த இடத்திற்கு பத்ரக்கில் இருந்து மீட்பு மற்றும் மீட்பு குழு உடனடியாக அனுப்பப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

# இலங்கையில் போர் நிறைவடையவில்லை: வைகோ பரபரப்பு பேட்டி!

சென்னை, பிப். 06–

இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடையை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கடந்த 2013–ம் ஆண்டு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் அனிதா சுமந்த், சுதிர் குமார் ஆகியோர் கொண்ட டிவிஷன் பெஞ்சில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது வைகோ நேரில் ஆஜரானார்.

அப்போது, இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது கட்சியின் நடைபயணத்தில் இருந்ததால் விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை என்று வைகோ கூறினார். மத்திய அரசு சார்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஆஜராக உள்ளார். அதனால், விசாரணையை தள்ளிவைக்க வேண்டும் என்று மத்திய அரசு தரப்பு



வக்கீல் கோரிக்கை விடுத்தார். இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் விசாரணையை வருகிற 16–ந்தேதிக்கு தள்ளிவைத்தனர். கோர்ட்டு அறையில் இருந்து வெளியில் வந்த வைகோ, நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், “இலங்கையில் போர் நிறைவடையவில்லை. அந்த போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இதுவரை விடுதலைப்புலிகள் நடத்திய 4 போர்கள் முடிவடைந்தாலும், வரும் தலைமுறையினர் இலங்கையில் தனி ஈழம் மலர்வதற்கான பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கான 5–ம் கட்ட போரை புதிய பரிமாணத்தில் மேற்கொள்வார்கள். இன்றைய வளரும் தலைமுறையினருடன் இணைந்து ஈழம் மலர்வதற்கான நடவடிக்கைகளில் நானும் செயலாற்றுவேன்” என்றார்.

# கட்சி பதவி வேண்டாம் நற்பணி மன்றம் போதும்: அண்ணாமலை புது ரூட்!

சென்னை, பிப். 06–

பாஜவின் புதிய மாநில தலைவராக நயினார் நாகேந்திரன் எம்எல்ஏ பொறுப்பேற்ற நாளில் இருந்தே கட்சிக்குள் கோஷ்டி பூசல் நீறு பூத்த நெருப்பாக உள்ளது. பாஜ மாநில தலைவராக அண்ணாமலை இருந்த நாளில் இருந்தே அவரது தீவிர ஆதரவாளர்களாக இருந்தவர்கள். புதிய தலைமையை ஏற்காமல் அடிக்கடி அண்ணாமலைக்கு ஆதரவுக்கரம் நீட்டி வருகின்றனர். நெல்லையில் நடந்த பூத் கமிட்டி மாநாட்டில் கூட ஒன்றிய அமைச்சர் அமித்ஷா முன்னிலையில், அண்ணாமலை பேச்சை தொடங்கியவுடன் பலத்த கரகோஷம் எழுப்பி, அண்ணாமலைக்கு தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.



கூட்டணி உள்ளிட்ட விஷயங்களில் தன்னை யாரும் கலந்து ஆலோசிக்கவில்லை என அண்ணாமலையும் அடிக்கடி தனது அதிருப்தியை தெரிவித்து வருகிறார். மேலும் பாஜவின் வாக்கு வங்கி உயர காரணமாக இருந்த அண்ணாமலைக்கு கட்சியில் போதிய முக்கியத்துவம் இல்லை என அண்ணாமலை ஆதரவாளர்களும் அடிக்கடி ஆவேச குரல் எழுப்பி வருகின்றனர். இந்நிலையில், வரும் சட்டசபை தேர்தலுக்கான பொறுப்புகள் ஒதுக்கீட்டிலும் அண்ணாமலைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என அவரது ஆதரவாளர்கள் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்ய வேண்டிய அவரை, சிங்காநல்லூர், மதுரை தெற்கு, விருகம்பாக்கம், காரைக்குடி, ஸ்ரீவைகுண்டம், பத்மநாபபுரம் ஆகிய 6 தொகுதிகளுக்கு மட்டும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டது கட்சியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், தனது தந்தையின் உடல்நலனை சுட்டிக்காட்டி தேர்தல் பொறுப்பில் இருந்து விலகுவதாக அண்ணாமலையும் அறிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தை தலைமையிடமாக வைத்து முன்னாள் பாஜ மாநில தலைவர் அண்ணாமலை பெயரில் அண்ணாமலை நற்பணி மன்றம் (அரசு பதிவு எண் 15/2025) என பதிவு செய்து தொடங்கினர். இதற்காக பாளை. கேடிசி நகரில் ஒரு விழாவையும் நடத்தினர். மன்றத்தின் கொடியையும் அண்ணாமலையின் படத்தை போட்டு வெளியிட்டிருந்தனர். இந்நிலையில் கட்சியில் எழுந்த சர்ச்சை காரணமாக கடந்த அக்டோபர் மாதம் அதை கலைக்க அண்ணாமலை உத்தரவிட்டார்.

இந்நிலையில் கட்சியில் இருந்து அண்ணாமலை ஓரம் கட்டப்படும் சூழலில், மீண்டும் அண்ணாமலை ஆதரவாளர்கள் ஒன்று கூடி ஆலோசிக்க திட்டமிட்டுள்ளனர். அதன்படி பாளை. கேடிசி நகர் பாலம் பகுதியில் அண்ணாமலை நற்பணி மன்றம் பெயரில் ஒரு விளம்பர போர்டு வைத்துள்ளனர். அதில், அண்ணாமலை நற்பணிமன்றத்தின் தலைமை அலுவலகமான நெல்லையில் வரும் 8ம் தேதி நிர்வாகிகள் அனைவரும் கூடி விவாதிக்க இருப்பதாக பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன. இதில் அண்ணாமலையின் எதிர்கால திட்டங்கள் குறித்து நற்பணி மன்றத்தினர் விவாதிக்க உள்ளதாக தெரிகிறது. இதை முன்கூட்டியே மோப்பம் பிடித்துக் கொண்ட நயினார் தரப்பும் எதற்காக இந்த கூட்டம் என தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது.

# 100 நாள் வேலை திட்டம் தி.மு.க., அரசை கண்டித்து அ.தி.மு.க., ஆர்ப்பாட்டம்!



சென்னை, பிப். 06–

அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி அறிக்கை: கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள், 100 நாள் வேலை திட்டத்தை நம்பியே வாழ்கின்றனர். அ.தி.மு.க., ஆட்சியில் இத்திட்டம் முறையாக செயல்படுத்தப்பட்டு, குறித்த நேரத்தில் ஊதியம் வழங்கப்பட்டது.

கடந்த 2021 சட்டசபை தேர்தலின்போது, 'இத்திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும்; பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்; சம்பளம் 300 ரூபாயாக உயர்த்தப்படும்' என தி.மு.க., வாக்குறுதி அளித்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து, இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக, கடந்த 57 மாத தி.மு.க., ஆட்சியில், ஆண்டுக்கு சராசரியாக 40 நாட்கள் கூட வேலை வழங்கவில்லை; குறித்த நேரத்தில் சம்பளம் வழங்குவதில்லை என மக்கள் புகார் தெரிவித்து உள்ளனர்.

இத்திட்டத்தில் தி.மு.க., வினர் பல்வேறு முறைகேடுகளை செய்துள்ளதாகவும் புகார்கள் வந்துள்ளன.


இந்நிலையில், மத்திய அரசு 100 நாட்கள் வேலை திட்டத்தை, 125 நாட்களாக உயர்த்தியதுடன், பணியாளர்களுக்கு நன்மை தரும் வகையில் பல மாறுதல்களை செய்துள்ளது. புதிய சட்டத்தில், மாநில அதிகாரம் குறைக்கப்படவில்லை. 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்குமாறு கூறப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் குளங்கள், சாலைகள், நீர்நிலைகள், சந்தைகள் போன்றவை மாநில அரசுக்குத்தான் சொந்தம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது, தி.மு.க.,வினரின் முறைகேடுகளுக்கு இடையூறாக இருக்கிறது என்பதால், 100 நாள் வேலை திட்டத்தையே சீர்குலைக்கும் முயற்சியில் தி.மு.க., அரசு ஈடுபட்டுள்ளது.

இதை கண்டித்து, அ.தி.மு.க., சார்பில், தமிழகம் முழுதும் அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன், வரும் 13ம் தேதி காலை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தொடர் சரிவில் தங்கம், வெள்ளி விலை!



சென்னை பிப். 06–

தங்கம் விலை 2–வது நாளாக மீண்டும் குறைந்துள்ளது. கிராமுக்கு 200 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.14,120–க்கும் சவரனுக்கு 1,600 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ரூ.1,12,960–க்கும் விற்பனை யாகிறது. வெள்ளி விலையும் கிராமுக்கு 20 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி 280 ரூபாய்க்கும் பார் வெள்ளி ரூ.2 லட்சத்து 80 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது.

# தேமுதிக, த.வெ.க கட்சிகள் சார்பில் விருப்ப மனு விநியோகம்...!



சென்னை, பிப். 06–

தேமுதிக, த.வெ.க கட்சிகள் சார்பில் இன்று முதல் விருப்ப மனு விநியோகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா வெளியிட்டுள்ள அறிக்கையில்

தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலையொட்டி தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவை தொகுதிகள் மற்றும் புதுச்சேரியில் உள்ள 30 சட்டப்பேரவை தொகுதிகளிலும் தேமுதிக சார்பில் போட்டியிட ஆர்வம் உள்ளவர்கள் பிப். 6–ம் தேதி (இன்று) முதல் விருப்ப மனுக்களை பெற்றுக் கொள்ளலாம். சென்னை கோயம்பேட்டில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை விருப்ப மனுக்கள் விநியோகம் செய்யப்படும்.

இதில் பொது தொகுதிக்கு ரூ.15 ஆயிரமும், தனித் தொகுதிக்கு ரூ.10 ஆயிரமும் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தொகுதிக்கு ரூ.10 ஆயிரமும், தனித் தொகுதிக்கு ரூ.5 ஆயிரமும் கட்டணமாக செலுத்தி விருப்ப மனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழகத்தின் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள் தங்களின் விருப்ப மனுக்களை அளிக்கலாம். இதற்கான விருப்ப மனுக்கள், வரும் 06.02.2026 வெள்ளிக்கிழமை முதல் 14.02.2026 சனிக்கிழமை வரை கழகத் தலைமை நிலையச் செயலகத்தில் வழங்கப்படுகின்றன பிப்ரவரி 6ஆம் தேதி அன்று நண்பகல் 12 மணி முதல், விருப்ப மனுக்களைப் பெறலாம். இதர நாள்களில் காலை 10.00 மணி முதல், மாலை 06.00 மணி வரை விருப்ப மனுக்களைப் பெறலாம். விருப்பம் உள்ளவர்கள் அவற்றைப் பெற்று, அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் விருப்ப மனுக்களுக்கான கட்டணம் குறித்த விவரங்கள் வெளியிடப் படவில்லை. அண்மையில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் விருப்ப மனு ரூ.50 ஆயிரம் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர். இதனால் விருப்ப மனு கட்டணம் குறித்த தகவல் இடம்பெறாததால், அக்கட்சியினர் இடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.


## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020